**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

ந.க.எண். 4160/ஆ5/2024, நாள். 21.11.2024

•••••

பொருள் பள்ளிக் கல்வி – அனைத்து உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு வருடாந்திர தென்னிந்திய அறிவியல் கண்காட்சி (SISF) 2024 – மாவட்ட அளவில் நடைபெறுதல் – தொடர்பாக

பார்வை
1. சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.042345/எம்2/2024, நாள்.10.10.2024
2. வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.1621/DC3/ஒபக/2024, நாள். 18.10.2024

•••••

பார்வை 1–ல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி, தென்னிந்திய அறிவியல் கண்காட்சி என்பது அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு முதல் 11ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான வருடாந்திர நிகழ்வாகும். 6 தென் மாநிலங்களும் பல்வேறு அறிவியல் கருப்பொருள்களில் கண்காட்சிகளுடன் பங்கேற்கின்றன. பங்கேற்றவர்கள் அந்தந்த மாநில அரசுகளால் நடத்தப்படும் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சிகளில் வெற்றிப்பெற்றவர்களாவர். இந்த ஆண்டு பள்ளிக் கல்வி இயக்ககம், புதுச்சேரி SISF – 2025–யை ஜனவரி – 2025 முதல் வாரத்தில் நடத்திட ஒப்புக்கொண்டுள்ளது. சரியான இடம் மற்றும் அட்டவணை பின்னர் தெரிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னிந்திய அறிவியல் கண்காட்சி 2025–க்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள 3 வெவ்வேறு வகைகளில் மாநில அளவிலான அறிவியல் கண்காட்சிகளில் இருந்து அதிகபட்சம் (35) முப்பத்தைந்து கண்காட்சிகள் தேர்தெடுக்கவும், 8 முதல் 10ஆம் வகுப்பு முடிய படிக்கும் மாணவர்கள் மட்டுமே பங்கேற்க தகுதியுடையவர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

1. தனிப்பட்ட வகை (ஒரு மாணவர் + ஒரு ஆசிரியர்) = 15 கண்காட்சிகள்
2. குழுவகை (2 மாணவர்கள் + ஒரு ஆசிரியர்) = 10 கண்காட்சிகள்
3. ஆசிரியர் வகை ( ஒரு ஆசிரியர் மட்டும்) = 10 கண்காட்சிகள்.

இக்கண்காட்சியானது பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒன்றில் இருக்க வேண்டும். இயற்பியல், வேதியியல், கணிதம், பூமி மற்றும் விண்வெளி அறிவியல், சுற்றுச்சூழல் அறிவியல், பொறியியல், உயிரியியல் / உயிர்வேதியியல் மற்றும் கணினி அறிவியல்.

மேற்கண்ட விதிகளின்படி பார்வை 2–ல் காணும் கடிதப்படி பள்ளி அளவில் 20.10.2024 முதல் 28.10.2024 வரை நடத்திட தெரிவிக்கப்பட்டது.

26.11.2024 (செவ்வாய்கிழமை) அன்று கீழ்காணும் அட்டவணையின் படி மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. மாவட்ட அளவில் முதலிடம் பெற்ற மாணவ / மாணவிகள் மாநில அளவில் நடைபெறும் கண்காட்சியில் கலந்துக்கொள்ள வேண்டும். மாநில அளவில் நடைபெறும் இடம் மற்றும் நாள் பின்னர் தெரிவிக்கப்படும்.

**மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சி**
**நடைபெறும் இடம் – அரசு (ஆண்கள்) மேல்நிலைப் பள்ளி, காட்பாடி**
**நாள். 26.11.2024 (செவ்வாய்கிழமை) நேரம் – காலை 9.30 மணி**

எனவே மேற்காண் நடைபெறும் மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியில் அனைத்து உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் 8ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்கள் பொறுப்பாசிரியருடன் உரிய நேரத்தில் கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

21.11.24

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்

பெறுநர்
தலைமையாசிரியர்கள்,
அரசு / அரசு நிதியுதவி பெறும் உயர் / மேல்நிலைப் பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

1. நகல்
   மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி)
   **(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)**
2. தலைமையாசிரியர்,
   அரசு (ஆண்கள்) மேல்நிலைப் பள்ளி,
   காட்பாடி, வேலூர் மாவட்டம்
   (அறிவியல் போதிய வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார். )